IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.141/2022

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | CHANDRAMOHAN |
| FATHER'S NAME | : | BALASUBRAMANI |
| VILLAGE | : | SEVOOR |
| OCCUPATION | : | PROFESSOR |
| AGE | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 23rd day of October 2024.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் சேவூர் கிராமத்தில் குடியிருந்து பேராசியராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு தெரியும். அவர் என்னுடைய பக்கத்து வீட்டை சேர்ந்தவர். 1 மற்றும் 2ம் எதிரி எனக்கு தெரியும். அவர்களும் எங்கள் பக்கத்து வீட்டை சேர்ந்தவர். 3ம் எதிரி எனக்கு தெரியாது. அ.சா.1 எதிரிகள் மீது கொடுத்த புகார் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். கடந்த 12.07.2021 அன்று காலை 10.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்த போது போலிசார் மணி மற்றும் இன்னொரு போலிசார் அங்கு வந்து முந்தைய நாள் ஆஜர் எதிரிக்கும் அ.சா.1க்கு நடந்த சண்டை சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைப்படம் வரைந்தார்கள். அதற்காக ஒரு கையொப்பம் செய்தேன் மற்றும் சம்பவயிடத்தில் இருந்து கட்டை மற்றும் கற்களை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார்கள். அதிலும் ஒரு கையொப்பம் செய்தோம். என்னுடன் சேர்ந்து கோபி என்பவரும் கையொப்பம் செய்தார். பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.2 மற்றும் 3ஆக குறியிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் எதிரி தட்சிணாமூர்த்தி வீட்டிற்கு வெளியே கண்காணிப்பு கேமிரா உள்ளது என்றால் எனது வீடு முதலில் உள்ளதால் பின்னால் உள்ள அவரின் வீட்டின் அருகே நான் சென்றதில்லை. எனவே எனக்கு தெரியாது. எனது வீட்டில் முன்னால் நின்று

போலிசார் படம் வரைந்து அதில் நான் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கட்டை மற்றும் கற்களை போலிசார் அங்கு கைப்பற்றினார்களா என்றால் அது எனக்கு ஞாபகம்மில்லை. கொம்பு என்பதும் உருட்டு கட்டை என்பதும் வேறு வேறு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உருட்டு கட்டை தோராயமாக 2 அடி இருக்கும். எனது முன்னால் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கட்டையில் ரத்தக்கரை படிந்திருந்ததா என்றால் அது ஞாபகம்மில்லை. நான் கையொப்பம் செய்ய முதலில் மறுத்துவிட்டேன். வேறு ஆட்கள் இல்லை என்பதால் என்னை போலிசார் கையொப்பம் செய்யச்சொன்னார்கள். போலிஸ் மணி-யை தவிர்த்து விசாரணைக்கு வந்த மற்றொரு போலிசாருக்கு வயது சுமார் 50 இருக்கும். அவர் என்ன பதவியில் போலிசில் உள்ளார் என்றால் அது தெரியவில்லை. போலிசார் என்னிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டதால் தான் எனக்கு எந்த விவரங்களும் தெரியவில்லை என்றால் சரியல்ல. வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்து கொடுத்ததால் தான் உருட்டு கட்டைக்கும் கொம்பிற்கும் வித்தியாசம் தெரியாமல் போலிசார் விசாரணையில் கொம்பு என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனக்கு நெருங்கிய நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது வீட்டில் எதிரில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்ததால் தான் எனக்கு எந்த விவரமும் தெரியவில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 23.10.2024 ஆம் தேதி பகரப்பட்டது.

ஓம்/– ஜோ.ஜெய்கணேஷ்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காட்பாடி.